1978 செப்டம்பர் 7]

திரு. மா. மணிமாறன்: தலைவரவர்களே, விவசாயிகளுக்கு கூட்டுறவுக் கடன் 4 தடவை ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் கடனோடு அடுத்தாண்டு வட்டியும் இரண்டு மடங்கு கூடுதலாக வரும். அந்தக் கடனையும் வட்டியையும் அந்த விவசாயிகளால் கட்ட முடியுமா என்பதையும் அரசு ஆராய வேண்டும். எனவே, கூட்டுறவுச் சங்கக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்ற கோரிக்கையை அரசு பரிசீலனை செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: தலைவரவர்களே, கூட்டுறவுக் கடன்களைத் தள்ளி வைப்பது என்ற பிரச்சனைக்கு இடமில்லை. காரணம் கூட்டுறவுக் கடன் என்பது ரிசர்வ் வங்கியிலிருந்தும் வைப்பு நிதியிலிருந்தும் பெறக்கூடிய கடன். உருளைக் கிழங்குப் பயிருக்குப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது என்பதால் மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்ட பிரச்சினைகளை அனுதாபத்தோடு இந்த அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கூத்தக்குடி ச. சண்முகம்: தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ரத்து செய்வது பற்றிக் கேட்டார்கள். அது பரிசீலனையில் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. அதாவது ரத்து செய்வதற்கான பரிசீலனை இல்லையா அல்லது குறுகிய காலக் கடன்களை நீண்ட காலக் கடன்களாகத் தள்ளிப் போடுகிற பரிசீலனை இல்லையா என்பதை விளக்க வேண்டும் என்று அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, என்னை விட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்தப் பிரச்சினையிலே அதிக விவரம் தெரிந்தவர்கள். ரத்து செய்வது என்பது ஒரு கொள்கைப் பிரச்சினை. ஆகவே இதனை இந்த நேரத்திலே சொல்ல இயலாது. எனவே தனிக் கேள்வி போட்டால் அதனை ஆய்ந்து உரிய வகையிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தகவல் தரப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவண்ணாமலையில் கூட்டுறவு அரிசி ஆலை.

*வினா—62 திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) திருவண்ணாமலை கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் அரிசி ஆலை அமைக்கும் திட்டத்திற்கு அரசின் அனுமதி கோரப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் எப்போது அனுமதி அளிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி:

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. இரெ. இராசமாணிக்கம்: பேரவைத் தலைவரவர்களே, திருவண்ணாமலையின் பகுதியிலே இருக்கின்ற மக்களுடைய நியாயமான கோரிக்கையை உத்தேசித்து அங்கே ஒரு அரிசி ஆலை திறப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருவண்ணாமலை கூட்டுறவு விற்பனை சங்கத்தினுடைய ஆதரவில் அரிசி ஆலை அமைக்கும் திட்டத்திற்கு அனுமதி கோரி கருத்துரு எதுவும் வரவில்லை என்றாலும்கூட கூட்டுறவுப் பதிவாளருக்கு அங்கே இருந்து வந்திருக்கின்றது. ஆனால், திருவண்ணாமலை கூட்டுறவு விற்பனைச் சங்கத்தின் தனி அதிகாரிகள் ஒரு டன் கொள்ளளவு கொண்ட அரிசி ஆலைக்காக ரூ. 3 இலட்சம் செலவில் ஒரு டிக்கார் டிகேட்டர் அமைப்பதற்கான ஒரு கருத்துருவை கூட்டுறவுச் சங்கப் பதிவாளருக்கு அனுப்பி இருந்தார்கள். அதனைக் கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் அவர்கள் கீழ்க்கண்ட காரணங்களுக்காகத் திருப்பி அனுப்பி இருக்கிறார்கள். அது திருவண்ணாமலை கூட்டுறவுச் சங்கத்திலே இருந்து கூட்டுறவுப் பதிவாளருக்கு வந்திருக்கிறது. அதிலே குறைபாடுகள் இருந்த காரணத்தினால் அது திருப்பி அனுப்பப்பட்டிருக்கிறது. அந்தக் குறைபாடுகளை எல்லாம் நீக்கி விட்டு முறைப்படி இணைப் பதிவாளர், அங்கே இருக்கின்ற டி. ஆர். போன்றவர்களுடைய பரிந்துரையோடு அரசாங்கத்திற்கு அனுப்ப ஏற்பாடு செய்திருக்கிறோம். அது வந்த பிறகு அதை ஆய்ந்து, அதிலே இடம் இருந்தால் நிச்சயமாக அந்த முயற்சி எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

விளவங்கோடு, கல்குளம் வட்ட சோதனை சாவடியில் பணியாளர்கள்.

* வினா 63 திரு. தே. ஞானசிகாமணி: மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) குமரி மாவட்டத்தில் விளவங்கோடு, கல்குளம் தாலுக்காக்களில் சோதனைச் சாவடிகள் நீக்கம் செய்யப்பட்டதன் காரணமாக வேலையிலிருந்து நீக்கம் செய்யப் பெற்ற 82 ரெவின்யூ இன்ஸ்பெக்டர்கள், 57 கடைநிலை ஊழியர்கள், 33 சுமை தூக்குவோர் ஆகியோருக்கு மாற்று வேலை வழங்க அரசுக்கு உத்தேசம் உண்டா?

(ஆ) ஆம் எனில், எப்போது வழங்கப்படும்?